சுருக்கம்

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை (சென்னை பெருநகர் பகுதி நீங்கலாக) முறைப்படுத்துதல் மற்றும் அப்பகுதிகளுக்கு குடிநீர், சாலை, தெருவிளக்கு, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் – ஆணைகள் வெளியிடப்பட்டன – இத்திட்டத்தின் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமின்றி மனைகளை வரன்முறைப் படுத்துவதற்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க ஆறுமாத கால அவகாசம் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 1) துறை

அரசாணை (நிலை). எண்.244 நாள்:05.12.2008

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.3.6.1999
2. அரசு கடித எண்.26331/நநி 1/99–10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.8.1.2000
3. அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.16.6.2000
4. அரசாணை (நிலை) எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.1.2.2001
5. அரசாணை (நிலை) எண்.11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.1.2006
6. அரசாணை (நிலை) எண்.59, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 25.07.2006
7. அரசாணை (நிலை) எண்.56, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 30.04.2007.
8. சட்டமன்றப் பேரவை அ.சா.கு.எண்.22380/2008/த.நா.ச.ம.பே. செ(நிருபர்) நாள் 14.11.2008.

–––––

<u>ஆணை:-</u>

தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்த வீட்டுமனைகளை முறைப்படுத்துவதை எளிமைப்படுத்தும் வகையில், திறந்த வெளி கட்டணம் (Open Space Reservation Charge), அபிவிருத்திக் கட்டணம் (Development Charge) மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் (Regularisation

fee) ஆகிய மூன்று கட்டணங்களை தனித்தனியே வசூலிப்பதற்கு பதிலாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரே ஒரு தொகையை (சென்னைப் பெருநகர் நீங்கலாக) மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளுக்கென நிர்ணயிக்கப்பட்ட முறைப்படுத்தும் கட்டணத்தை வசூலித்துக் கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் உள்ள வீட்டு மனைகளை முறைப்படுத்த அனுமதித்து ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. இதுவரை வரன்முறை செய்யப்படாத மனைகளை வரன்முறை செய்ய ஏதுவாக ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த காலக்கெடுவினை நீட்டிக்க கோரி நகர்மன்றத் தலைவர்கள், மாமன்றத் தலைவர்கள், குடியிருப்போர் நலச்சங்கங்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து கடிதங்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் அறிவிப்பு செய்திருந்ததை தொடர்ந்து ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்ட திட்டம் மற்றும் அதன் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமுமின்றி, முறைப்படுத்த விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அளவை மட்டும் 31.12.2007 வரை நீட்டித்து ஏழாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணைகள் வெளியிடப்பட்டன..

3. 14.11.2008 அன்று சட்டப்பேரவையில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு அடிப்படை வசதி செய்து கொடுப்பதற்காக குறைந்த கட்டணத்தில் அந்தப் பகுதிகளை முறைப்படுத்துவதற்கு ஆணை வெளியிடப்பட்டு பெரும்பகுதியான மக்கள் பயனடைந்த சூழ்நிலையில், 10, 15 சதவீத மக்கள் அந்த வாய்ப்பை உரிய காலத்தில் பயன்படுத்த முடியாமல் விடுபட்டுள்ளதால் அவர்களும் பயனடையும் வகையில் அந்தப் பகுதியை முறைப்படுத்திக் கொள்வதற்கான கட்டணம் செலுத்துவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு பதிலளிக்கையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி அமைச்சர் அவர்கள், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்த வீட்டு மனைகளை வரன்முறைப்படுத்துவதற்கான திட்டத்தின் கீழ் விண்ணப்பங்கள் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தினை " ஆறு மாத காலம் வழங்குவதற்கு அரசு முடிவு செய்திருக்கிறது " என அறிவித்திருந்தார்கள்.

4. மேற்கூறப்பட்ட சூழ்நிலையில், ஆறாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் குறிப்பிட்ட திட்டம் மற்றும் அதன் நிபந்தனைகளில் எந்தவித மாற்றமுமின்றி, அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் அமைந்த மனைகளை முறைப்படுத்த விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு மாத கால அவகாசம் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**நிரஞ்சன் மார்டி**
**அரசு செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை 5
நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை 2

ஊரக வளர்ச்சி இயக்குநர், சென்னை15
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை 108.
பத்திரப் பதிவுத் துறை தலைவர், சென்னை 25
அனைத்து மாநகராட்சி மேயர்கள், (சென்னையைத் தவிர)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாநகராட்சி ஆணையர்கள் (சென்னை மாநகராட்சியைத் தவிர)
அனைத்து மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள் (நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)
அனைத்து நகராட்சி ஆணையர்கள், (மூன்றாம் நிலை நகராட்சி உட்பட)
(நகராட்சி நிர்வாக ஆணையர் மூலமாக)
அனைத்து பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், (பேரூராட்சிகளின் இயக்குநர் மூலமாக)
உள்ளாட்சி நிதித் தணிக்கை துறை இயக்குநர், சென்னை 108.

<u>நகல்:</u>
ஊரக வளர்ச்சித் துறை, சென்னை 9
வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை 9
வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் துறை, சென்னை 9
பொதுத் (கமுக்கம்/ சிறப்பு அ) துறை, சென்னை 9
உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம், ,சென்னை 8
முதலமைச்சர் அலுவலகம், சென்னை 9
ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை 9
வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் ( அநமு 2 பிரிவு / பொது பிரிவு), சென்னை 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.